1972 மார்ச் 13]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த இடத்தையும் அமைச்சரவர்கள் நேரிலே வந்து பார்த்து இருக்கிறார்கள். புழலேரிக்கு வரும் அந்தக் கால்வாய் ஒரு கிராமத்திலுள்ளவர்களை அவர்களுடைய வயலிலிருந்து பிரித்து, அவர்கள் மறுபடியும் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது அது அதிகாரிகளின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஆண்டே கட்டுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

சாலைகள்

* 467 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரமடை-வெள்ளியங்காடு சாலை சீரமைப்புத் திட்டம் நிறைவேற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதைக்கு இச்சாலையை சீரமைப்பதற்கு திட்டம் ஒன்றுமில்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் இருக்கிற காரமேடை—வெள்ளியங்காடு வரையில் இருக்கும் சாலை சீரமைப்பு வேலை நிதி வசதி போதாததால் தடைபடுகிறது. எனவே, அதற்குப் போதுமான நிதியை அரசு அளித்து வேலையைத் துரிதப்படுத்துவதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சாலையின் மொத்த நீளம் 10 மைல் 3 பர்லாங்கு. அதிலே 6 மைல் 7 பர்லாங்கு அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. பஸ்-ரோடு ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சீரமைப்பதற்கு ரூ. 30,000 செலவழிக்க இருக்கிறோம். அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் ரோடைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்க முடியும். மீதியுள்ள சாலையின் நீளத்திற்கு பஞ்சாயத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

* 468 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை நகருக்குச் செல்லும் திருச்சி பாதை, அவினுசி பாதை இரண்டிலிருந்தும் பிரிந்து நகரைத் தொடாமலேயே நகர எல்லைக்கு வெளியே நெடுஞ்சாலைகளில் சேரும்படி பை-பாஸ் ரோடுகள் அமைத்திடும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் இருக்கிறது என்று சொன்னுர்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவு rough estimate has been assessed at 157 லட்சம் ரூபாய். இந்தத் திட்டத்தைப் பொறுத்து லாண்ட் அக்விசிஷன் செய்ய 39.37 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற செயற் குறிப்புகள் இருக்கின்றன.

அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள்

* 469 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்வதற்கு தனித் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அதன் தொழிலாளர்களுக்காக 116 குடியிருப்புகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் போக்குவரத்துத் துறையில் இருக்கும்போது 116 வீடுகள் கட்டுவது மட்டுமே இப்போது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். குஜராத் மாநிலத்தில் இவர்களுக்காக ‘ஓன் யுவர் ஹவுஸ்’ என்ற ஸ்கீம் இருப்பது போல், இப்போது வீட்டுவசதி வாரியம் பலதிட்டங்களை நிறை வேற்றிக் கொண்டிருக்கும்போது போக்குவரத்து துறையிலுள்ள பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு சில ஆண்டுகளில் வீடுகள் கிடைக்கின்ற வகையில் பெரிய திட்டத்தை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா ?